சித்தூர் போராட்டம்: அண்ணா கருத்து

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆனி 29௳ செவ்வாய் (13—7—54) வெளியூர்: ஆனி 30௳ புதன் (14 7—54)	மலர்: 2 இதழ்: 25

ஆந்திர மக்களிடை கொள்கை விளக்கம்—இலட்சிய முழக்கம்!

சித்தூர் மாவட்ட தி. மு. கழக மாநாட்டு நிகழ்ச்சி விவரங்கள்

சித்தூர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது சமூக சீர்திருத்த—அரசியல் மாநாடுகள், பொதட்டூர் பேட்டையில் ஜுலை 10, 11-ம் நாட்களில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

திராவிட முன்னேற்றக் கழகம், 'திராவிட நாடு, திராவிடருக்கே' எனும் தனது இலட்சியம் ஆந்திரப் பகுதியிலும் முழங்க, எடுத்துக் கொண்டிருக்கிற சீரியதொரு முயற்சிக்கு, வெற்றிகரமாக நடைபெற்ற, பொதட்டூர் மாநாடுகள் ஒரு எடுத்துக் காட்டாய் நின்றன.

இரயில் போக்குவரத்து அறவே கிடையாது; பஸ் வசதியோ மிகவும் சுருக்கம்; பொதட்டூருக்குச் செல்லும் சாலையோ!—'இதுதான் தமிழகத்துடன் இணைய வேண்டிய பகுதியாயிற்றே; நாம் ஏன் செப்பனிட்டு, சீர்பெறச் செய்ய வேண்டும், இப்பகுதிச்சாலைகளை!"—என்ற ஆந்திர சர்க்காரின் எண்ணத்தாலோ என்னவோ, பழுதுபட்டு, பள்ளமும் மேடும் நிறைந்து பயங்கரமாகக் காட்சி தந்தது அந்த பொதட்டூர் சாலை! அங்கே மின்சார வசதி கிடையாது; மாநாட்டிற்கு வருவோருக்குத் தேவையான உணவு தர போதுமான உணவு விடுதிகளும் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு ஊரில்—பொதட்டூர் பேட்டையில், தி. மு. கழக மாநாடுகள் சிறப்புற நடைபெற்றன என்றால், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு, தி. மு. கழக இலட்சியத்தில் எவ்வளவு பற்றுள்ளது என்பதை எடுத்துக் காட்டவில்லையா?

பொட்டி ஸ்ரீராமுலு பந்தலில், நடராசன் அரங்கில் மாநாடுகள் நடைபெற்றன. மாநாட்டுப் பந்தலைச் சுற்றி, ஏன், அந்த ஊரைச் சுற்றியும் நாற்புறமும் குன்றுகள்! அவைகளின் நடுவே, ஓங்கி வளர்ந்த குளிர்நிழல் தரும் மரங்கள்! ஊரிலே வாழ்பவர்களோ?—ஓயாது, ஒழியாது உழைக்கும், கைத்தறி நெசவாளர்கள்! ஒருமுறை எழுப்பிய மாநாட்டுப் பந்தல் பேய்க்காற்றால் பிய்த்தெறியப் பட்டபோது, ஊரில் உள்ளவர்கள், கும்பத்திற்கோருவராய் வந்து, விழுந்த பந்தலை, மீண்டும் எழுப்பினர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பொதட்டூர் பேட்டை மாநாடுகள், பொதுவாக, ஆந்திரப் பகுதியில் உள்ள தமிழர்களிடையேயும் ஆந்திரர்களிடையேயும் சகோதர உணர்வை வளர்க்கவும், நமது இலட்சியத்தைப் புரிந்து கொள்ள இயலாதிருந்த ஆந்திரர்களுக்கு இலட்சியம் விளங்குவதற்கும், இன்று, பல அரசியல் கட்சியினரின் கவனத்தைக் கவர்ந்திருக்கிற சித்தூர் பிரச்சினையில், "நாம் கொண்டுள்ள முடிவுதான் நியாயமானது" என்பதை அவர்கள் உணரவும் பெரும் அளவு பயன்படும் என்றால் அது மிகையாகாது.

சமூக சீர்திருத்த மாநாடு

10—7—54 சனி அன்று பகல் 11-30 மணி அளவில் தோழியர் ஜி. கஸ்தூரி குழுவினரின் இன்னிசையுடன் மாநாடு ஆரம்பமாகியது.

வரவேற்புக் குழுத் தலைவர் கே. டி. கே. சாமி எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி மாநாட்டைத் துவக்கி வைத்து அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பிறகு, தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், மாநாட்டிற்குத் தலைமை தாங்கவேண்டும் என்று வ. கு. தலைவர் முன்மொழிந்ததை வழிமொழிந்து தோழர் என். வி. நடராசன், தோழியர் பூங்கோதை, தோழர்கள் வி முனிசாமி, கே ஏ. மதியழகன் ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், தலைமை உரை ஆற்றியதும் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மீண்டும் மாலை 4-30 மணிக்கு மாநாடு துவங்கியது. தோழர் முரசொலி ஆர். என். பாண்டியன் பேசியதும், தோழர் சி. பி. சிற்றரசு சிறந்ததொரு எழுச்சியுரை ஆற்றினார்.

பிறகு தோழர் என். வி. நடராசன், தோழியர்கள், சத்தியவாணிமுத்து, பூங்கோதை ஆகியோர் பேசியதும், தோழர் சி. வி எம். அண்ணாமலை சொற்பொழிவாற்றினார்.

தோழியர் அருள்மொழி பேசியதும், இறுதியாக, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் மாநாடு முடிவுற்றது.

எம் ஜி ராமச்சந்திரன் குழுவினரின் "இன்பக் கனவு" எனும் நாடகம் இரவு நடைபெற்றது.

அரசியல் மாநாடு

11—7—54 ஞாயிறன்று காலை 10-30 மணி அளவில் தோழியர் ஜி. கஸ்தூரி குழுவினரின் இன்னிசையுடன் மாநாடு ஆரம்பமாகியது.

மாநாட்டுத் தலைவரால், தொண்டர்கள் அணிவகுப்பு பார்வையிடப்பட்டு, கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தோழர் கே. டி. கே. சாமி வரவேற்புரையை நிகழ்த்தினார்.

மாநாட்டை தோழர் இராம அரங்கண்ணல் திறந்து வைத்தார்.

தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமை தாங்கவேண்டும் என வரவேற்புக் குழுவினர் முன்மொழிந்ததை தோழர்கள் அ பொன்னம்பலனார், முரசொலி பாண்டியன், வி. முனுசாமி, வரதராசன், ரஷீத் ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

தோழர் ஏ. எல். சி. கிருட்டிணசாமி தலைமை ஏற்று சிறந்ததோர் உரை ஆற்றினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சிறப்புரையுடன் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மாலையில் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தோழர்கள், ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ., கே. ஏ. மதியழகன், நாகர் கோவில் வி. எம். ஜான், நேசன், அ. பொன்னம்பலனார், சி. பி சிற்றரசு, கே. எம். கண்ணபிரான், வி இராமசாமி, சத்தியவாணி முத்து ஆகியோர் பேசினர்.

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மிகச் சிறந்த அரசியல் முக்கியத்துவம் மிகுந்த கருத்துரை ஆற்றினார்கள்.

மாநாடு தலைவர் முடிவுரையுடன் கலைந்தது.

இரவு எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் 'சந்திர மோகன்' நாடகம் நடைபெற்றது.

'எய்தவனிருக்க அம்பை நோவதா?'

'போரிடுவது-டெல்லியுடனா? கர்நூலுடனா?'

'போராட்டத்தில் முறைகள் பலவுண்டு'

'ஏழு கடுக்காய் மருத்துவம்' எல்லா நோய்களுக்கும் பொருந்தாது

(நமது தனி நிருபர்)

பொதட்டூர்பேட்டையில் நடைபெற்ற சித்தூர் மாவட்ட தி. மு. கழக அரசியல் மாநாட்டில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், சித்தூர் தமிழர் பிரச்னை குறித்துப் பேசுகையில், இந்தப் பிரச்னைக்கு முடிவு காண நாம் போரிட வேண்டியது டெல்லி ஆதிபத்தியத்தை எதிர்த்தே அன்றி, ஆந்திர முதல்வர் பிரகாசத்தை எதிர்த்து அல்ல என்று அறுதியிட்டுக் கூறினார்.

உண்மையை மறைத்து ஆந்திரர்களுக்கும்—தமிழர்களுக்கும் பகை மூட்டுவது பொறுப்பற்ற செயல் என்பதை விளக்கினார். அவரது சொற்பொழிவின் விவரம் 2-ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது:—

இன்றைய அரசியல் மாநாட்டில் தி. மு கழகத்தின் லட்சியமான "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது குறித்தும், இன்றைய பிரச்னைகள் குறித்தும், சித்தூர் தமிழர்களின் பிரச்னை குறித்தும். இவைபற்றி தி. மு கழகத்தின் திட்டம் என்ன என்பது குறித்தும், தோழர்கள் விளக்கமாகப் பேசியுள்ளனர்.

இயற்கையின் எண்ணம்

"இந்தப் பகுதி மக்கள், 'நம்மிடையே பல அரசியல் கட்சியினர் மாச்சரியத்தையும், குரோதத்தையும் தானே வளர்த்திருக்கின்றனர்? ஆந்திரருக்கும்—தமிழருக்கும் இருக்க சோதர உணர்வை சீர்குலைத்து விரோத மனப்பான்மையைத் தானே தூண்டி உள்ளனர்? தி மு. கழகம் நமது பிரச்னை குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறது? நமது பிரச்னைகள் சுமுகமாகத் தீர வழி சொல்வார்களா? பரிகாரம் தேடுவார்களா?"—என எண்ணுவது இயற்கைதான்!

முன் பிறந்த இயக்கம்

அவர்களுக்குச் சொல்லுகிறேன்—முதலில் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்—தி. மு. கழகம், சித்தூர் பிரச்சினையைத் தீர்க்க மட்டும்தான் ஏற்பட்டது அல்ல; ஆந்திரம் உதயமாவதற்கு முன்பே தி. மு. கழகம் உருவாகி ஒளி வீசுகிற ஒரு இயக்கம்.

ஒளி விளக்கு

ஏதேனும் பொருள் தொலைந்து போயிருந்தால் ஒரு விளக்கேற்றி வைப்பது, தொலைந்த அந்த ஒரு பொருளைத் தேடுவதற்கு மட்டுமல்ல—மற்றும் அதுபோன்ற தொலைந்த பொருள்களைத் தேடுவதற்கும், ஒளி தருவதற்கும்கூட அந்த விளக்குப் பயன்படும். அப்படிப்பட்ட ஒளி விளக்குக்கு ஒப்பானதுதான் நமது தி. மு. கழகம்!

இன்று, சித்தூர், ஆந்திரரின் ஆசை வலையில் விழுந்து கிடக்கிறது. அதைத் தேடிக் கண்டுபிடித்து, மீட்டு, தமிழகத்துடன் சேர்க்க வேண்டியது ஒரு மகத்தான வேலை; ஆனால், அந்த வேலைக்காக மட்டுமே, ஒளி விளக்கான தி. மு. கழகம் தோற்றுவிக்கப்படவில்லை என்பதையும் மறந்து விடக்கூடாது.

கழக முடிவு

சித்தூர் தமிழ்ப் பகுதிகள், நாஞ்சில் பகுதிகள் ஆகியவை முறையே ஆந்திரத்திலிருந்தும், திருவாங்கூர் கொச்சியிலிருந்தும் பிரிக்கப்பட்டு, தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும்; புதுவையிலே, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருக்கும் தமிழர்களை திராவிடத்துடன் இணைக்க வேண்டும்; இந்த நாட்டிலே பிறந்தும் வாழ வழியின்றி, கடல் கடந்து, வயிறு வளர்க்கச் சென்றவர்களில், இலங்கையிலே வாழுகின்ற இலட்சக்கணக்கான திராவிடரின் உரிமை காக்கப் பணி புரிய வேண்டும்—இப்படிப் பலப்பல பெரும் பொறுப்புகளை நிறைவேற்றித்தர வேண்டியது

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—7—54 செவ்வாய்

களங் கண்ட காட்சி!

இன்னும், இரண்டே நாட்கள் உள்ளன! நாம் வெற்றி விழா கொண்டாட!! வீர வரலாற்றை மீண்டும் ஒருமுறை நோக்கி, உள்ளக் களிப்பும், அதே நேரத்தில் உறுதிப்பாடும் கொள்ள!!

சென்ற ஆண்டு ஜுலை திங்கள் முழுதும், நமது முன்னேற்றக் கழகம் அறப்போர் பாசறையாக மாறி இருந்தது. பேசும் மடம், கலைஞர் கூடம், அடுக்குச் சொல் எழுத்தாளர் கூடாரம், சுகவாசிகள் கொலு மண்டபம் என்றெல்லாம் நமது கழகத் தலைவர்களையும், உறவுமுறை கொண்டு வாழும் உயிர்த் தோழர்களையும், அர்ச்சித்தனர், அரசியல் சூதுமதியினர்! அவ்வாறு, ஏசிய பேசி, தூற்றிப் பழித்தனர் அரசியல் எத்தர்கள்!

அந்த அரசியல் எத்தர்கள் நாணமடைக, வெட்கித் தலைகவிழத் தக்க வண்ணமாய் அன்று அன்பர் ஆச்சாரியார், தமது பின் புத்தியாலும், ஆட்சி பீடத்தமர்ந்துள்ளோம் என்ற ஆணவத்தாலும், அமைத்துத்தந்த அறப்போர்க் களத்தில், கழகக் காளைகள் திறம்படப் போரிட்டனர். ஆம்! போரிட்டனர்—கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை—சிறிதும் வழுவா வண்ணம்!

அரசியலில அறப் போர் நாம் வேண்டாதது—விரும்பாதது. 'போர், போர்' எனத் தினவெடுத்தத் தோளுடன், தினம் தினம் சல்லடம் கட்டித் திரிந்து வந்தால்தான், அரசியல் துறையில் ஒரு கட்சி வளமாக வாழும் என்ற அர்த்தக் கோட்பாட்டை நம்பி வாழ்ந்து வருவதல்ல நமது கழகம் என்பதை, நமது பொதுச்செயலாளர் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்—வலியுறுத்தியும் வருகிறார். அதே நேரத்தில், அறப்போர் களம் புக வேண்டிய கட்டாயத்தை, அறிவிழந்து ஆளவந்தார்கள் நம்மீது திணிக்க முற்பட்டால், அது கண்டு நாம் அயர்ந்திடக் கூடாது; அடக்குமுறை சீறிப் பாயுமே எனப் பயம் கொள்ளக் கூடாது; மாறாக, போர்க் குணம் — அதுவும் — அறப்போர்க் குணம் — பெற்றுக் களம் புக வேண்டும்;

எடுத்த கருமம் வெற்றியாக முடிகிற வரையில் போரிட வேண்டும், புறமுதுகிடாமல்;

களத்திலும், போர் அறநெறி பிறழாமல், பார்த்துக் கொள்ள வேண்டும்;

'பொறுமை பொறுமை' எனப் பூரிப்போடு கூறிடும் பொதுச் செயலாளர்தான், அறப்போர்க் களத்திற்கு இன்றியமையாதனவாக உள்ள வீரப் பண்பு பற்றியும், முகமலர்ச்சியுடன் மேற்கூறியவாறு விளக்கமுரைத்தும் உள்ளார்.

திராவிடரின் கல்வி முன்னேற்றத்தை நிரந்தரமாகத் தொலைத்துவிட வியாசர் வழிவந்த விவேகியாம் ஆச்சாரியார், ஆட்சி பீடத்தில் இருந்துகொண்டு, புதிய கல்வித் திட்டம் என்னும் பெயரில், சாதிச் சனியனுக்கும் அறியாமை பிணிக்கும் ஆக்கமூட்டும், ஒரு கோணல் திட்டத்தை, எதேச்சாதிகாரமாகப் புகுத்தினார். திட்டத்தைக் கேட்டதும் நமக்குத் திகைப்பு பிறந்ததே யல்லாது, உடனடியாகக் களத்தில் கால் வைக்க வேண்டும் என்ற 'கெடு மதி' ஏற்படவில்லை. மக்களாட்சி முறையை மதிக்காத மதோன்மத்தர்தான் மகுடம் புனைந்துள்ள ஆச்சாரியார் எனத் தெரிந்திருந்தும்கூட, நமது கழகம் தனது வழியிலும் உயிரோடும் கலந்து கிடக்கும் மக்களாட்சிப் பண்பை, முதற்கண் தூது விடுத்தது, அந்த ஆணவக்காரரிடம்! வராகத்தின் முன் கொட்டிய வெண்முத்துக் குவியலாயிற்று, நமது முறையீடு!

நூற்றுக்கணக்கான மாநாடுகளிலிருந்து 'திட்டம் தீது! கூடாது! திரும்பப் பெறுக' என அறிவுரைக் கிளம்பியது! ஆயிரக் கணக்கான கூட்டங்களில் இருந்து 'திட்டம் ஒழிக' எனக் குறையிறுந்தனர் லட்சக்கணக்கான திராவிடப் பெருங்குடி மக்கள்! செவிசாய்த்தாரில்லை — மாறாக சினங் கொண்டார், ஆட்சி பீடத்தில் இருந்த ஆணவக்காரர்!

அமைச்சர் ஆச்சாரியார் இல்லத்தின்முன் அறப்போர் தொடங்கிற்று! 'கல்வித் திட்டம் ஒழிக' எனும் குரலோசை இடி முழக்கமென எழுந்தது. ஊர்வலமாகச் செல்ல சட்டம் கோரும் உரிமை பெறவில்லை அறப்போர் வீரர்கள் எனப் புகல் கூறி, நூற்றுக்கணக்கானவரை, ஆச்சாரியார் ஆட்சி சிறையில் தள்ளி மூடியது.

கழக வீரர்களை சிறைக் கோட்டம் நண்ணு முன், பாதுகாப்புப் படையினர் தடிகொண்டு தாக்கி, வீரர்களின் மண்டையைப் பிளப்பதும், கை கால்களை முறிப்பதும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி தோழர்களை மயக்குறச் செய்வதும், பிரம்படி தருவதும், மிகமிகச் சாதாரணமாக நிகழ்ந்த வண்ணம் இருந்தன.

வடவர் ஆதிபத்தியத்தின் அடையாளமாக இருந்து கொண்டு, திராவிடரின் தன்மானத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கும், இழிநிலையைத் துடைத்துக் கொள்ள கல்லக்குடி அறப்போர் தொடங்கப்பட்டது. ஆச்சாரியார், ஆத்திரம் கொண்டு நாசத்தை அறப்போர் தோழர்கள் மீது ஏவினார்!

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த புலனைப் படைத்த சிலர், கழகத் தோழர்கள் மீதும், அவர்கள் அறப்பணியைக் கண்டு ஆசிகூறக் கூடியிருந்த எண்ணத் தொலையாத மக்கள் மீதும், குண்டு மழை பொழிந்தனர்! அமைச்சர் ஆச்சாரியார் அமைத்துத் தந்த கல்லக்குடி பலிபீடத்தில், இரு உயிர்—அதுவும் இரு இளைஞர்களின் உயிர்—பலியிடப்பட்டன!

வடவர் ஆதிபத்தியத்தின் 'பெருந் தலைவர்' இந்தியப் பிரதமர் நேரு, திராவிடர் மீது வீசிய சுடுசொல் தாங்காது, நாவடக்கமற்ற நாயகருக்கு நல்லறிவு கொளுத்தும் பணியாக, புகைவண்டி நிறுத்தப் போர் தொடுத்தது நமது கழகம்.

தமிழ் நாட்டில் புகைவண்டி நிலையங்கள் எங்கெங்கு உள்ளனவோ அங்கெல்லாம், ஜுலை 15 பகல் 12 மணியளவில், ஓடிக்கொண்டிருந்த புகை வண்டிகள் நின்றன—கழகத் தோழர்களால் நிறுத்தப்பட்டன!

இந்த புகைவண்டி நிறுத்த அறப்போரில், 'கொல்வதற்காகவே சுடு' என ஆச்சாரியார் போட்ட உத்தரவை, பாதுகாப்புப் படையினர் எழுத்துக்கு எழுத்துத் தவறாமல் செயலாற்றி விட்டனர் நான்கு உயிர் நாசமாயிற்று!

ஆக, ஆறு பிணங்களின் குருதியைக் கொண்டு, ஆச்சாரியாரின் ஆட்சிக்கு, இரத்த நீராட்டு நடைபெற்று இருக்கிறது!

கறை போகாத ஆச்சாரியார் ஆட்சி வரலாறு இது!

இவ்வளவிற்கும் பொதுச் செயலாளர் சிறையில்! துணைச் செயலாளர்கள் இருவரும், செயலாளருக்குத் துணையாக சென்னை சிறையில்! அறப்போர் படையை நடத்திச் செல்லும் பயிற்சி பெற்றுள்ள திறமை மிக்கத் தளபதிகள் பலரும் சிறையில்! ஜுலை 15-க்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே அவர்களை அமைச்சர் ஆச்சாரியார், தமது விருந்தினராக்கிக் கொண்டார்!

பொறுப்புள்ள தலைவர்களைக் கைது செய்துவிட்டால் அறப்போர் படையில் ஒழுங்கீனம் ஏற்படும், கட்டுக்கடங்கா சீர்குலைவு உண்டாகும், அமைதி அழிந்து பலாத்காரம் உருவெடுக்கும், அச்சூழ்நிலையில், பலப்பல பழிசுமத்தி, கழகத்தையே கொலை செய்துவிடலாமென, தப்புக் கணக்கும் போட்டுக்கொண்டு, தமது புத்திக்குக் களங்கத்தைத் தேடிக் கொண்டார் அமைச்சர் ஆச்சாரியார்!

ஆச்சாரியார் எதிர்பார்த்தபடி, அறப்போர் வீரர்கள் அமைதி கெட நடக்கவில்லை; கண்ணியம் கரையடிய செயலாற்றவில்லை; நேர்மை பிழைபட பணி புரியவில்லை! பொறுப்புள்ள தலைவர்கள், படையைக் கண்காணித்து வந்தக்கால், எப்படி படையினர் புகழ்வீச நடந்துகொள்வரோ, அதைக் காட்டிலும் பன்மடங்குக் கூடுதலாக சிறப்புற ஒழுகி, கழகத்திற்கு நிலையான நீடு புகழ் தேடித் தந்தனர்!

மும்முனையிலும் துவங்கப்பட்ட, நமது அறப்போர் வென்றது—வெற்றி வாகை சூடியது! அமைச்சர் ஆச்சாரியார் தோற்றார்—தம் வாழ்நாளில் என்றும் காணாத—இனி என்றும் காணமுடியாத அளவு படுதோல்வி பெற்றார்!

அந்தத் தோல்வியை அவரே, தம்மையும் அறியாமல் வெளிப்படையாக ஒப்புக் கொண்டும் உள்ளார்; நம்மை எறும்பென்றார்; ஈக் கூட்டமென்றார்; வீம்பேடு யார் என வாய் மதங் கொண்டு வசை பாடினார்!

பலநாள் கற்றோர், அமைச்சர் ஆச்சாரியார் அர்ச்சித்த, இந்த ஆபாசத்தின் அடிப்படையில், மறைந்து கிடக்கும் உண்மையை அறிவர்!

ஆபாச அர்ச்சனையோடு நிற்கவில்லை ஆச்சாரியார்—தாமே கலகமதியாக இருந்து, காங்கிரஸ் களபதிகளை, கழகத் தோழர்களைத் தாக்கவும் தூண்டினார்! இரண்டொரு இடங்களில் இந்த இதோபதேசத்தின் சேட்டைகள் நிகழ்ந்தும் உள்ளன!

தோல்வி கண்டவர்களுக்கெல்லாம் ஏற்படும் தொழுநோய், இது! படித்த அரசியல்வாதியான ஆச்சாரியாரும், அத்தொழுநோய்க்கு பலியானது விந்தையிலும் விந்தையாகும்!

நமது கழகத்தின் கணக்கைத் தீர்த்துக் கட்டப்போகிறேன் எனக் கர்ஜித்தவரின் கணக்கைத் தீர்த்துக் கட்டி இருக்கிறது நமது மும்முனைப் போர்!

ஆளவந்தார்களிடம் உள்ள தடி, துப்பாக்கி ஆகிய இரண்டிற்கும் உள்ள சக்தியைக் காட்டிலும், நமது கழகத் தோழர்கள் நடாத்திய அறப்போரின் சக்தி சிறப்புடையது — வெல்லும் திறமுடையது என்ற உண்மையை, நாம் நடத்திய மும்முனைப் போராட்டம் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது! மறக்கக்கூடாது இம் மகத்தான அனுபவ உண்மையை!

ஜுலை 15-ம் நாளன்று, சென்ற ஆண்டில் நாம் நடத்திய மும்முனைப் போர், தாயக விடுதலைக்காக நாம் இனிமேற் கொள்ள இருக்கும் பெரும் போருக்கு, அமைந்ததோர், பயிற்சிக் கூடமாகும். சிறந்த பயிற்சி பெற்றுள்ளோம்; அப்பயிற்சி பழுதுபட்டு விடாமல் இருக்க, இவ்வாண்டு அந்த நாளில், அதை நினைவுறுத்திக் கொள்வோமாக!

உயிரிழந்த தோழர்களுக்கு நாம் வீர வணக்கம் செலுத்துவோம்! சிறையின் இடர்ப்பட்ட தோழர்களின் வீரத் தியாகத்திற்கு, பாராட்டுரை வழங்குவோம்!

மும்முனைப் போராட்டத்தின் தொடர்கதையாக, தூத்துக்குடி, கல்லக்குடி வழக்கு நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கிறது! அதை வாபஸ் பெறுமாறு ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூற வேண்டும்!

ஆவி இழந்த தோழர்களின் குடும்பங்கள், வறுமையில் இடர்ப்படுகின்றன. அவர்கள் வாட்டத்தைப் போக்க, ஆவன செய்யுமாறு, அரசியலாரை வற்புறுத்த வேண்டும்!

திராவிடம் விடுபடத் தேவைப்பட்டால், எம் இன்னுயிரையும் காணிக்கையாக்கத் தயங்கமாட்டோம் என நாம் ஒவ்வொருவரும் சூளுரைத்துக் கொள்ளவேண்டும், ஜுலை 15-ல்!

அந்த நாளில்தான் நாம் களம் புகுந்து, கொண்ட கோட்பாட்டின் வெற்றியும், படைப் பயிற்சியும் பெற்றுள்ளோம். அப்புனித நாளின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை மக்களுக்கு அறிவிப்போமாக! நாமும் புத்துணர்வு பெறுவோமாக!

வைணவ மதம்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"கம்பராமாயணம் தெய்வீகக் கதை; அது அனலாலும், புனலாலும் அழிக்க முடியாத அமர காவியம்; முன்பு சைவ நூல்களையும், சமண நூல்களையும் தீயிலிட்டபோது, சமண நூல்கள் எரிந்து சாம்பலாயின—சைவ நூல் அப்படியே பச்சை ஓலைகளாகவே இருந்தன; வைகையிலே சைவ நூல் எதிர் நீச்சல் போட்டது; சமண நூல் கடலிலே விழுந்தது; அதே போன்று கம்பராமாயணமும் தெய்வீகமானது; அதை யாரும் அழிக்க முடியாது"—என்று சவால் விடுத்த பிரமுகர்தானே சுயமரியாதை இயக்கத்தினர் அதை 'தீயிட்டுக் கொளுத்துவோம்,' என்று சவாலை ஏற்றுக்கொண்டது?

பின்னும் சிலர், ராமாயண காவியம் ஒரு வரலாற்றுக் காவியம் என்கின்றனர்; அப்படியே இருந்தாலும் அதை நாம் எப்படிப் போற்ற இயலும்? அது உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்டதாக ஆராய்ச்சியாளர்கள் கொள்ள முடியவில்லையே? அதிலே உள்ள சம்பவ வர்ணனைகளும், இன்னபிறவும், அளவில்லாத கற்பனையும்—அது ஒரு வரலாற்றுப் புரட்டு—என்ற முடிவைத்தானே நம்மை மேற்கொள்ளச் செய்கிறது?

வரலாற்றுக் காவியமானது என்று சாதிப்பார்களேயானாலும், அது ஆரிய - திராவிடப் போராட்டந்தான் இருக்க முடியும்?

வடநாட்டு இராமன் தென்னாட்டு இராவணனுடன் போர் தொடுத்தான்; அதற்குக் காரணம், வடநாட்டுப் பார்ப்பனர்கள், ஆடு, மாடுகளைக் கொன்று வேள்விகளும், யாகங்களும் செய்வதைத் தென்னாட்டுத் தமிழர்கள் வெறுத்தனர்; அவைகள் நடக்க ஒட்டாது தடுத்தனர்; அதனால், பார்ப்பனர், ராமனின் துணை வேண்டினர்; ராமன் போர் தொடுத்தான்; அதற்குத் துணையாக இங்குள்ள சிலரையும் ஏற்றுக் கொண்டான்.

உலக சரித்திர ஆசிரியர்கள் கூற்றுப்படி கம்பன் காலத்தில் தமிழ் நாட்டில்தான் மிகப் பண்பட்ட உயரிய நாகரிகம் நிலவி இருக்கிறது. அப்படிப்பட்ட பண்பாடு கொண்ட மக்களை அரக்கர்கள், குரங்குகள் என்றெழுதினானே கம்பன்—இதை நாம் எப்படிக் கண்டிக்காமலிருக்க முடியும்?

நாகரிகம் மிக்க திராவிடரை வடநாட்டு ஆரியர்கள் நயவஞ்சகமாக வீழ்த்திய காதையை, தன் இனத்தை இன்னொரு இனத்தான் இழித்தும், பழித்தும் பேசியதை, தெய்வ உருக் கொடுத்துக் காவியமாகப் புனைந்தவன் கம்பன் என்றால் அவனை நாம் புகழவா முடியும்?

தங்கள் எதிரிகளான திராவிடரை, அரக்கர்கள்—குரங்குகள் என்று வடநாட்டு ஆரியர்கள் வசை பாடியதிலே ஆச்சரியமில்லையே!

ஏனென்றால், இன்றைக்கூட இட்லரையும், முசோலினியையும் 'யுத்த அரக்கர்கள்' என்று வர்ணிக்கவில்லையா?

தனக்கு மாற்றுக் கட்சிக்காரர்களான கம்யூனிஸ்டுகளை, 'செம்பிடாரிகள்'-என்று திரு. சொக்கலிங்கம் எழுதவில்லையா?

ஆனால், பழிக்கப்படுபவர்களில் ஒருவனே, அப்படி தன் இனத்தைப் பழித்தவனைத் துதிபாடுவதுடன், எதிரியையே, தன் இனத்தவர் ஏற்றித் தொழவேண்டிய கடவுளாக ஆக்கினான் என்றால், அது இனத் துரோகம் என்பதன்றி வேறென்ன? அந்த துரோகச் செயல் புரிந்த கம்பனை நாம் எப்படிக் கண்டிக்காமலிருக்க முடியும்?

வைணவ மத வளர்ச்சிக்கே கம்ப ராமாயணம் தோன்றியது!

நாம் கண்டிப்பது கம்பனின் கற்பனைத் திறனை அல்ல—கம்பனின் துரோகத்தை!

"தமிழ் நாட்டிலே, அதன் பண்டைப் பெருமைகளைச் சொல்லும் இலக்கியச் சோலைகள் பல இருக்கும்போது, கம்ப ராமாயணம் மட்டும் காலட்சேபம் செய்கிற அளவுக்குப் புகழப் படுவானேன்?—என்று, "கம்ப ராமாயணம்?" என்ற தலைப்பில், 8—7—54-ல், சென்னை மெமோரியல் மண்டபத்தில் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், கேட்டுவிட்டு, "எக்காரணம் கொண்டு கம்ப ராமாயணம் எழுந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்," என்று குறிப்பிட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தெனக் கொள்ளப்படும் தொல்காப்பியம்தான் நமக்குத் தொன்மையான நூல். அந்த நூலிலே காணப்படும் சில வரிகள், அதற்கு முன்பும் நமது இலக்கியங்கள் இருந்திருக்கின்றன என்பதைச் சொல்கின்றன.

நமக்கு, தமிழகத்தைப் பற்றிய நிலையான தொடர்பான சரித்திரம் வெண்மொழுல் கிடைக்காமலிருக்கலாம்; ஆனால், சரித்திர சம்பவங்களைச் சொல்லும் குறிப்புகளும், ஆதாரங்களும் இல்லாமற் போகவில்லை ஏனைய நாட்டினர் எல்லாம் நிலைட்டி எரித்து ஒளி பெற்று வந்த காலத்தில் தமிழர்கள் விளக்கு எண்ணெய் ஊற்றி விளக்கு எரித்து, ஒளி பெற்று வந்திருக்கும் நாகரீக மேம்பாட்டையும், உலகத்திற்கே, நாகரீகம் இங்கே இருந்து தான் 'ஏற்றுமதி' செய்யப்பட்டது என்பதையும் நமக்குச் சொல்கிற சரித்திரக் குறிப்புகள் நமக்கு உண்டு.

தொல்காப்பியமும், அகநானூறும், புறநானூறும் போன்ற நூல்கள் எல்லாம் நாட்டின் வளத்தையும், குடி வழி கோலோச்சிய மன்னர்தம் வரலாறுகளையும், இயற்கை வர்ணனைகளையும், வீரமும் காதலும் செறிந்த வாழ்வு பெற்ற மாந்தரின் மாண்பையும், செதிமுறை தவறு அரசுகளையும், அவர் தம் போர் முறைகளையும், கொடைப் பண்பையும்தான் நம்மால் காண முடிகின்றது.

இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஆறும் நூற்றாண்டு வரையிலுங்கூட எழுந்த காவியங்களில் எல்லாம் சமயக் கருத்துக்கள் மிகச் சிறிய அளவும், மிகப் பெரும் அளவு மக்களின் மாண்புறு வாழ்வும், வீரமும், காதலும், தமிழர் நெறியும் இடம் பெற்றுள்ளன. இந்த நூற்றாண்டுகளில் தோன்றிய அத்தகைய இலக்கியங்கள், மணிமேகலை, சிலப்பதிகாரம், கல்லாடம் சூடாமணி ஆகியவையாகும்.

அடுத்து ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் ஆகிய சமயக் குரவர்களின் சைவ சமயத்தையே முழுக்க, முழுக்க விளக்கிய இலக்கியங்கள் எழுந்தன.

பத்தாம் நூற்றாண்டில் சமண சமயக் காவியமாக 'ஜீவக சிந்தாமணி' எழுந்தது.

10-ம் நூற்றாண்டில் திருத்தக்க தேவர் என்ற சமண சமயப் புலவரால் காவிய ருபத்துடன், இலக்கியச் சுவையுடன் எழுதப்பட்ட இந்த 'ஜீவக சிந்தாமணி'யின் சுவையிலே மயங்கி, 11-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த சோழ மன்னன் அநபாயன் என்பான் சமண மதத்தைத் தழுவ எண்ணினான்; அப்போது அவனிடம் மந்திரியாக இருந்த சேக்கிழார் என்ற சைவர், மன்னனின் மத மாறுதலைக் கண்டு மனம்பொறுதலாமல் மன்னனின் மனதை சமண மதத்திலிருந்தும், அதன் இலக்கியமான 'ஜீவக சிந்தாமணி'யிலிருந்தும் திருப்பி, மீண்டும் சைவப்பற்றுடையவனாகச் செய்வதற்காக, போட்டியாக 'பெரிய புராணம்' என்னும் சைவ சமய நூலை எழுதியதாக பெரிய புராண முன்னுரையில் கண்டிருக்கிறது இன்றுகூட நமது அண்ணா அவர்களின் புத்தகங்களை மக்கள் படித்துத் திருந்தி, அவர் பின்னும் செல்கிறார்களே என்று எண்ணி அண்ணாவின் புத்தகங்களைத் தடை செய்யவில்லையா அரசாங்கத்தார்? வேறு பல புத்தகங்களை எழுதி மக்களைத் திருப்ப முனையவில்லையா பலர்? அதே போலத்தான், அன்றும், சோழ மன்னனின், மனதை மாற்ற, போட்டிக் காவியமாக சைவ மத 'பெரிய புராணத்'தை இயற்றினார் சேக்கிழார்!

இப்படி, சைவ மதத்தினை அழித்து சமண மதம் முளைக்கவும், அதை எதிர்த்து போட்டியாக, சைவத்தைத் தழைக்கச் செய்ய 'பெரிய புராணமு'ம் எழுந்தது.

இவ்வடி சைவ, சமண மதங்கள் தங்களின் மதங்களைக் காத்துக் கொள்ள, மரம்ப, இலக்கியச் சுவை மிக்க காவியங்களைப் படைத்ததைப் போலவே வைணவ மதத்தின் வளர்ச்சிக்கு ஒரு இலக்கியம் தேவைப்பட்டது; அந்த மதத்தின் சிறப்பைப் பரப்ப சிறந்ததொரு இலக்கியம் தேவைப்பட்டது; அந்தத் தேவையின் விளைவுதான் கம்ப ராமாயணம்!

ஆங்காங்கே சிதறுண்டு கிடந்த வால்மீகி ராமாயணக் கருத்துக்களைக் கூட்டிச் சேர்த்து, தனது கவிதா வல்லமையினுல், கற்பனைத் திறனுல் சொல்லழகும், உவமை அழகும், காப்பியச் சிறப்பும் மிக்க காவியமாக அதை உருவாக்கினுன் கம்பன்!

கம்ப ராமாயண காலத்திற்குப் பிறகு—வில்லி பாரதம், தோத்திரப் பாடல்கள், தேம்பாவணி, நாலாயிர திவ்யப் பிரபந்தம், சிவப் புராணம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், இராமலிங்கர் பாடல்கள்—என பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை பல்வேறு சமயங்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் எண்ணற்ற காவியங்கள் உண்டாகியுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முதலில் சுப்பிரமணிய பாரதியும், பிறகு புரட்சிக்கவி பாரதிதாசனும் இலக்கிய, காவிய கர்த்தாக்களாக உள்ளனர். இதுதான் தமிழக இலக்கிய வளர்ச்சியின் வரலாறு!

இந்த இலக்கிய வளர்ச்சி வரலாற்றை இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து இன்றுவரை பார்த்தால், ஆரம்பக் காலத்தில், மக்கள், 'வாழ்க்கை வாழ்வதற்கே' எனும் உயரிய நோக்கோடு, தங்கள் நேரம், நினைப்பு, உழைப்பு, ஆற்றல் அறிவு, அத்தனையையும் வாழ்விற்கே செலவு செய்து வளமாக வாழ்ந்திருப்பதையும், இடைக்காலத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இலக்கியங்கள் எல்லாம், மக்கள் தம் வாழ்வை மதத்திற்கும், மதம் போதிக்கும் கடவுளர்களுக்கும் அடகு வைக்கத் தூண்டும் முறையிலேயே அமைந்து இடப்பதையும், இன்று அந்த நிலை மாறி, மறுமலர்ச்சி பூத்து வருவதையும் காண முடியும்.

அப்படி, மத வளர்ச்சிக்காகத் தோன்றிய நூல்களில் கம்ப ராமாயணமும் ஒன்று!

கம்பனுக்கு முன்பேகூட இராமன் என்ற அரசனைப் பற்றிய கருத்துக்கள் நாட்டிலே நடமாடித்தான் இருக்கின்றன; ஆனால், அவை எல்லாம் மக்களின வாழ்க்கைத் தொடர்பு தருவனவாக இருக்கவில்லை கம்பன், ராமகாதை எழுதிய பின்னர் தான், ராமன், நாட்டு மக்களால் தான் வணங்கித் தொழ வேண்டிய கடவுளாக ஆக்கப்பட்டான்

நம்மைக் குறை கூறுகிற கம்பராமாயண ஆதரவாளர்கள் சொல்கின்றனர்—"கம்ப ராமாயணம் உவமை அழகும் அணியழகும் மிக்கது; பொருளாழமும், சொல்லாழமும் நிறைந்தது; மக்கட்கு நீதி பல போதிப்பது; அதைக் குறை கூறுபவர்கள் நாஸ்திகர்கள்; கடவுளை இல்லை என்று சொல்பவர்கள்"—என்று!

நாம் சொல்கிறோம்—"நாம், கம்பனின் கவிதா வல்லமையையோ, கற்பனைத் திறனையோ மதிக்காமல் இல்லை; சொல்லழகும், பொருளழகும் மிக்கது என்பதையும் உணர்ந்து ரசிக்கிறோம்; ஆனால், தங்கக் கிண்ணத்திலே தரப்படும் விஷம் என்றால் ஏற்றுக்கொள்ள முடியுமா? அதே போன்று, கவிதை அழகுக்காக அதன் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது எப்படி சாத்தியம்?

கம்பராமாயணம் தோன்றிய தால் நாட்டிலே ஏற்பட்டுள்ள இழிநிலைகள், ஏற்றத் தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் எல்லாம் கொஞ்சமா? இவற்றை எண்ணிப் பார்த்துதான், நாம்—கம்ப ராமாயணம் மக்கள் வாழ வழி காட்டுமா? அவர்களுக்கு முன்னேற்றத்தைத் தருமா?—என்று கேட்கிறோம்!

கம்பராமாயணம் நாட்டவரால் போற்றப்படுவது அதன் சொல் நயத்திற்காகவா? அணி அழகு கண்டா? உவமை ஒப்புயர்வு உணர்ந்தா? இல்லையாதே! மாறாக, அந்தக் கதையிலே வரும் கதாநாயகனைக் கடவுளாக ஆக்கப்பட்டிருக்கிறது—அதனால் அவன் பெயரால் ஆலயங்கள்; அவனுக்கு உதவி செய்த ஆஞ்சநேயனுக்கு ஒரு ஆலயம்; அதிலே ஆரியரின் வாழ்வுக்கு வழிவகைகள்; மற்றவரின் வாழ்வுக்கு உலை—இப்படிப்பட்ட நிலைகள் உருவானதைக் கண்டபின்தான் நாம் அதைக் கண்டிக்க முன் வந்தோம்.

தேவலோகத்தில் கேட்டதை நாரதர் புரிதின் இருந்த வால்மீகிக்குச் சொல்ல, வால்மீகி, ராமகாதை எழுத, அதைப் பின் தொடர்ந்து கம்பன், ராமனைக் கடவுள் அவதாரமாக உருவாக்கினுன்; இதை எப்படி நாங்கள் நம்ப முடியும் என்பதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். வால்மீகியின் கதைக்கும், கம்பனின் காவியத்திற்கும் மூலன் பாவோன் எாானம்!

அறிவு பூர்வமான வாதத்திற்கும் யதார்த்த நிலைகளுக்கும் ஒன்றி வாராத ஒன்றை, கம்பன் தனது காவியத்தினுல் மக்கள் மனதில் இடம் பெறச் செய்த இழி தன்மையையும், அதன் விளைவுகளையுமே நாம் எதிர்க்கிறோம்.

கம்பனின் காவியத்தால் கடவுள் நம்பிக்கை மக்கள் வாழ்வில் இடம் பெற முடிந்ததினுல்தானே மதவாதிகளும், ஆத்திகர்களும், ஆரியர்களும், இந்த நாட்டிலே எத்தனையோ சிறப்புடைய இலக்கியங்களுக்குத் தராத மதிப்பையும், போற்றுதலையும் அதற்குத் தருகின்றனர்? கம்பனைப் புகழ்கின்றனர்? கம்ப ராமாயணத்தை மேலும் மேலும் மக்களிடை பரப்பி வருகின்றனர்?

மக்களின் வாழ்வைப் பாழ்படுத்துகிற, அவர்களிடை நிலவும் மூட எண்ணங்களையும், மத, கடவுள் புராண இதிகாச நம்பிக்கைகளையும், இந்த ராமாயணம் வளர்க்கிறது என்றகாரணத்தால் தானே சுயமரியாதை இயக்கத்தவர் அதைக் கண்டிக்க முற்பட்டனர்?

(8-ம் பக்கம் பார்க்க)

****

மும்முனைப் போர் முழக்க நாள்

ஜூலை 15-ல் நாடெங்கும் கொண்டாடுக!

★

1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சிறப்பிற்குரிய நன்னாள்!

'ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்', 'கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டம்', 'நேருவின் ஆணவ மொழி எதிர்ப்பு இரயில் நிறுத்தப் போராட்டம்' ஆகிய மூன்று போராட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கித் திறம்பட நடத்திக் காட்டி வெற்றி வாகை சூடியது 1953 ஜூலைத் திங்களிலாகும்.

1953 ஜூலை 14-ம் நாள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் அமைந்த போராட்டப் படையினர் ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்டத்தை எதிர்த்தும் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாள் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கிய போராட்டப் படையினர் 'டால்மியாபுரம்' என்ற இரயில் நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றும் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாளில் தமிழகமெங்கணும் உள்ள கிளைக் கழகத் தோழர்கள் இரயில் நிறுத்தம் செய்து திராவிடத்தில் வளர்ந்து வரும் சக்தியின் ஆற்றலையும், அனைவையும் ஆணவ மொழி பேசிய பண்டித நேருவுக்கு உணர்த்தினுர்கள்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் பெற்ற வெற்றியினை நினைத்து மகிழவும், பெறவேண்டிய வெற்றியினை நினைத்து ஊக்கம் பெறவும், கிளைக் கழகத் தோழர்கள் ஊர்தோறும் இவ்வாண்டு ஜூலை 15-ம் நாளை மும்முனைப் போர் முழக்க நாளாகக் கொண்டாடும்படி பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்கிருர்கள்.

கழகக் கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் புதுக் கொடி ஏற்றுவித்தல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், போராட்டங்களின் வரலாற்றை விளக்கித் துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், கூட்டங்களில் போராட்டங்களின் அடிப்படைக் கருத்துக்களையும், கழகத் தோழர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் விளக்கிக் கூறி, போராட்டத்தில் கலந்துகொண்ட வீரர்களுக்கு நன்றி தெரிவித்தல் ஆகிய முறைகளில் ஜூலை 15-ம் நாளைக் கொண்டாடும்படி கிளைக் கழகத்தார் எல்லோரும் வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.

அரசியலாரின் அனுமதி பெற்று நடத்த வேண்டிய பொதுக்கூட்ட ஊர்வலங்களை அனுமதி பெற்று நடத்தவும், அமைதி—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவை குலையாமல் காத்துக்கொள்ளவும் ஆன முறைகளில் ஜூலை 15-ஐக் கொண்டாடுவீர்களாக!

தலைமை நிலையம்
சென்னை-13
6—7—54

இரா. நெடுஞ்செழியன்,
அமைச் செயலாளர்.
திராவிட முன்னேற்றக் கழகம்,

****

பொதுச்செயலாளர் சொற்பொழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியத்தில் மக்கள் தி. மு. கழகத்தை நிறுத்தியிருப்பதால்தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்—'தி. மு. கழகம், சித்தூர் பிரச்சினைக்காக மட்டுமல்ல தோற்றுவிக்கப்பட்டது'—என்று!

இன்று இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம், பல்லவி பாடுவதுபோல் டில்லி, டில்லி என்று பேசினார்கள்; சித்தூர் தமிழர்களின் பிரச்னை திராவிடம் போராட வேண்டியது, டில்லி ஏகாதிபத்தியத்துடன் என்று முழக்கமிட்டார்கள்!

ம. பொ. சி. கருத்து?

ஆனால், தோழர் ம பொ. சி. கூறுகிறார்—'சித்தூர் பிரச்னைக்காக நான் நடத்தும் போராட்டம் நேருவை எதிர்த்தும் அல்ல; காமராசரை எதிர்த்தும் அல்ல; ஆந்திர முதலமைச்சர் பிரகாசத்தை எதிர்த்து"—என்று!

கம்யூனிஸ்டு கூற்று!

கம்யூனிஸ்டு நண்பர்கள் சொல்கிறார்கள—'தமிழ் நாடு கம்யூனிஸ்டு கட்சியும், ஆந்திரக் கம்யூனிஸ்டு கட்சியும் ஒரு தனி அறையில் உட்கார்ந்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தால், அதுவே சித்தூர் பிரச்னைக்குப் பரிகாரமாகி விடும்'—என்று!

கழக நோக்கு

நாம் சொல்கிறோம்—'சித்தூர் தமிழர் பிரச்னையானாலும் சரி, நாஞ்சில் தமிழர் பிரச்னையாயினும் சரி, புதுவைப் பிரச்னையானாலும் சரி, இலங்கை வாழ் திராவிடர் பிரச்னையானாலும் சரி, இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் நல்லதொரு முடிவு காண, டில்லியின் ஆதிக்கம் தொலைய வேண்டும்'—என்று!

அனுபல்லவி பாடுவது போன்று, டில்லி, டில்லி என்று பேசுகிறோம்—ஏன்? நமக்கும் மற்ற கட்சியினருக்கும் ஏன் இந்த வித்தியாசம்?

போராட்டம்—பல ரகம்

'தேங்காய் பறிக்க வேண்டுமானால், தென்னை மரத்தில் ஏறித்தான் பறிக்க வேண்டும்; தோறட்டிகொண்டு பறிக்க இயலாது! மாங்கனி பறிக்க தோறடே உபயோகிக்கலாம்; ஏறியும் பறிக்கலாம். வாழைப்பழம் வேண்டுமானால் தாருடன் வாழை மரத்திலிருந்து வெட்டித்தான் பெற வேண்டும்! மல்லிகை மலரை செடியிலிருந்து கையாலேயே பறிக்கலாம்! அதைப்போலவேதான் தி. மு. கழகம் சொல்கிறது—'பிரச்னைகளுக்குத் தக்கவாறு போல் போராட்டங்கள் இருக்க வேண்டும்'—என்று!

ஏழு கடுக்காய்!

கிராம வைத்தியர் ஒருவர், வயிற்று வலி என்றாலும், வாந்திபேதி என்றாலும், கடும் காய்ச்சலென்றாலும், காசநோய் என்றாலும், ஏழு கடுக்காய் கொடுப்பாராம்! ஏழு கடுக்காய்களை அரைத்து, கஷாயம் தருவாராம் எந்த நோயானாலும் அந்த வைத்தியர்! ஒரு நாள் அவரிடம், ஒரு கழுதையைப் பறிகொடுத்து விட்ட 'வண்ணான்' வந்தானாம்—'கழுதையைக் கண்டீரா, வைத்தியரே'—என்று கேட்டுக்கொண்டு! உடனே வைத்தியர், அந்த 'வண்ணானு'க்கு ஏதோ வியாதி என நினைத்து, அதற்கும் ஏழு கடுக்காய் கொடுத்தாராம்!

இது ஒரு பழங் கதை—அதே போன்றுதான் தோழர் ம. பொ. சி. எந்தப் பிரச்னையானாலும், 'போர்—போர்' என்கிறார்!

நாம் சொல்கிறோம்—"சில நோய்கட்கு—மருந்து செந்தூரமாயிருக்க வேண்டும்; சிலவற்றிற்கு பச்சிலையாகவும், சிலவற்றிற்கு அறுவை வைத்தியமாகவும் இருக்கவேண்டும்; சில நோய்கட்கு மருந்தே தேவையில்லை; அரை நாள் பட்டினியே பரம ஔடதமாயிருக்கக்கூடும்,"—என்று!

சித்தூர் பிரச்னை எப்படிப் பட்டது?

ஆந்திரம் உருவான நேரத்தில், டில்லி ஆதிபத்தியம் நியாயமாக நடந்துகொண்டிருந்தால், இந்தப் பிரச்னை எழுந்தே இருக்காதே!

பிரகாசம் பெற்றதல்ல!—டெல்லி செய்த சதி!

ஆந்திர முதலமைச்சர் பிரகாசம், தனது வீரத்தால் போரிட்டா, சித்தூர் தமிழ்ப் பகுதிகளை, ஆந்திரத்துடன் இணைத்துக் கொண்டார்? கிடையாதே! பிரகாசம், சென்னையும் ஆந்திருக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தார்! 'சென்னையைக் கேட்டால் ஆந்திரமே கிடையாது.' என்று டெல்லி சொன்னதும், 'ஆந்திரம் கிடைத்தால் போதும்; சென்னை தேவையில்லை,' என்ற முடிவுக்குத்தானே பிரகாசம் வந்தார்? சித்தூர் தமிழ்ப் பகுதிகளும் தங்களுக்கு வேண்டுமென ஆந்திரர்களாகக் கேட்டா எடுத்துக் கொண்டார்கள்? இல்லையே!

ஆந்திர மாநிலம் வேண்டும் என, பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். அதுவரை ஆந்திரத்தைப் பிரிக்கச் சம்மதிக்காதிருந்த டெல்லி ஆதிபத்தியம், 'ஆந்திரத்தைத் தருகிறேன்,' எனச் சொல்லி, ஒரு நீதிபதியை, ஆந்திரப் பிரிவினை பற்றி விசாரணை செய்ய அனுப்பியது. அந்த நீதிபதி விசாரணைசெய்து அறிக்கை ஒன்றைத் தந்தார். அந்த அறிக்கையை பரிசிலனை செய்யாமலேயே ஆந்திர மாநிலத்தை அமைத்து, தகராறுக்கிடமான பிரதேசம் என்று சொல்லப்பட்ட சித்தூர் தமிழ்ப் பகுதிகளையும் ஆந்திரத்துடன் இணைத்துவிட்டார்கள், டெல்லி ஆதிபத்தியக்காரர்கள்! அதுதானே உண்மை? ஆந்திரம் அமையும்போதே எல்லைக்கமிஷனையும் நிறுவி, விசாரணை செய்து, எல்லைகளை வரையறுக்க நினைத்திருந்தால்—அப்படி நியாயமாக நடந்துகொண்டிருந்தால்—இந்தப் பிரச்சினை எழுந்திருக்க இடமுண்டா?

அர்த்தமற்றது

உண்மை அப்படி இருக்கும்போது, 'நேருவை எதிர்த்தல்ல போராட்டம்; பிரகாசத்தை எதிர்த்துப் போராட்டம்'—என்பது எப்படி அர்த்தமுள்ளதாக இருக்க முடியும்? அந்த வாதம ஆற்றல் உள்ளதோ, கவைக்குதவக் கூடியதோ அல்லவே அல்ல! எய்தவனிருக்க அம்பை நோவது நியாயமா?

டில்லியா—கர்நூலா?

சித்தூர் தமிழர் பிரச்சினையிலே, நியாயம் பிறக்க வேண்டிய இடம் டில்லியா, கர்நூலா? ஆந்திரத்துடன் உள்ள இந்தத் தமிழ்ப் பகுதிகளைப் பிரித்துத் தமிழகத்துடன் இணைக்க வேண்டிய சட்டம் செய்யப்பட வேண்டிய இடம் டில்லியா, கர்நூலா?

சித்தூர் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்கக் கோரி அண்ணாதுரையும், ம. பொ. சி-யும், விநாயகமும் போராட்டத்தில் இறங்கி, கர்நூலில் சிறை வைக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம்;—காரியம் ஆகிவிடுமா?

அதிகாரம் இல்லையே!

பிரகாசமாகப் பார்த்து, 'சித்தூர் தமிழ்ப் பகுதிகள் எங்களுக்கு வேண்டாம்; நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்',—என்று சொல்லக்கூட முடியாதே! அதற்கான அதிகாரம் அவர் கையில் இல்லையே! சித்தூரைப் பிடித்து ஆந்திரத்துடன் இணைத்தது, டில்லி அதிபர் பண்டிதரேயல்லாது, ஆந்திர முதல்வர் பிரகாசம் அல்லவே!

ஆகவேதான், சித்தூர் தமிழ்ப் பகுதியை தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்று நாம் டில்லியைத் தட்டிக் கேட்க வேண்டும் அதற்கு நமக்குத் திறமையும், உள்ள உரமும் வேண்டும்.

எப்படி நியாயமாகும்?

'சித்தூரை மீட்டுக்கொடு', என்று நாம் டில்லியைக் கேட்டால், அது, 'முடியாது' என்று சொல்வதானல், அதற்கு நாம் காரணம் கேட்க வேண்டும்; டில்லி சம்மதித்து, பிரகாசம் மறுத்தால், அவருடன் போர் செய்ய வேண்டும்; அதை விடுத்து, 'பிரகாசத்துடன் போர்' என்று ம. பொ. சி அறிக்கை தருவது எப்படி நியாயமாகும்?

—[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

திரு—கொச்சி தமிழர் அறப்போர்

நாகர் கோவில் நகர சபைத் தலைவர் சி. ஆதமுசாமும், திரு—கொச்சி சட்டசபை உறுப்பினர் பு அனந்தராமனும் தடையை மீறியதாகக் கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு முனுர் சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் இரண்டு வாரம் வெறுங் காவல் தண்டனை விதித்தார்.

கழகக் கூட்டங்கள்

★

வேடபட்டி

(கோயம்புத்தூர் வட்டம்)

அண்ணா திடலில்
14—7—54 புதன் மாலை
தலைவர்: எஸ். கலிங்கன்
பேசுவோர்:
எம். எஸ். ராமசாமி
இரா. சேசவன்
சு. வே. அண்ணாமலை

★

சைதாப்பேட்டை

தி. மு. கழகக் கட்டிடத்தில்
15—7—54 மாலை 6½ மணிக்கு
தலைவர்: அண்ணாமலை
பேசுவோர்:
சைதை சம்மந்தம்
க. முருகேசன்

★

ஈரோடு

காரை வாய்க்கால் மைதானத்தில்
15—7—54 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஈ. வே. கி. சம்பத்
பேசுபவர்:
சி. என். அண்ணாதுரை

★

காஞ்சீபுரம்

கங்கைகொண்டான் மண்டபம்
15—7—54 மாலை 6½ மணிக்கு
தலைவர்: வேங்கடேசன்
பேசுவோர்:
சி வி. எம். அண்ணாமலை
முகவை ஆர். எஸ் பாண்டியன்

★

மதுரை

திலகர் திடலில்
15—7—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. கருணாநிதி
என். வி நடராசன்
எஸ். முத்து

அன்று மாலை 4 மணியளவில் நகர் கிளையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று திலகர் திடலை வந்தடையும்.

• • •

குறிப்பு:—நகரத்தில் உள்ள கிளைக் கழகத் தோழர்கள், வீதிகள்தோறும் தோரணங்களாலும், கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கவும், கழகக் கட்டிடங்களில் புதுக் கொடி ஏற்றிக் கொண்டாடவும் வேண்டுமென மதுரை நகர தி. மு கழகச் செயலாளர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

★

நீத்தம்

(மாயூரம் வட்டம்)

காளியம்மன் கோயிலுக்கு எதிரில்
15—7—54 வியாழன் மாலை
தலைவர்: ஆர் சம்பந்தம்
பேசுவோர்:
என். கிட்டப்பா
ஆர். மணியம்
கே. எஸ் சண்முகம்

★

வெள்ளக்கோவில்

15—7—54 வியாழன் மாலை
தலைவர்: பொன்வளமுத்து
பேசுபவர்:
சி. பி' சிற்றரசு

மும்முனைப் போராட்ட முழக்க நாள் விழா

சென்னை 43-வது வட்ட (மீர்சாகிப்பேட்டை) தி மு. கழகக் கிளையின் சார்பில் 15—7—54 அன்று காலை 7 மணியளவில் நடைபெறும். கழகக் கட்டிடத்தில் தோழர் முகவை ஆர். எஸ் பாண்டியன் கொடியேற்றி வைத்துப் பேசுவார்.

சென்னை மாவட்ட

தி. மு. கழகத் தோழர்களுக்கு

★

ஜூலை 15-ம் நாள் மும்முனைப் போர் முழக்க நாளை, காசிராஜன் மித் மைதானத்தில் சென்னை மாவட்ட தி. மு. கழகம் கொண்டாடவிருக்கிறது.

தோழர் மதியழகன் அவர்கள் தலைமையில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், அரங்கண்ணல் ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 3 மணிக்கு ராயபுரம் 'அறிவகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் வி. ராமசாமி தலைமையில் புறப்படும்.

சென்னை மாவட்டத்தின் எல்லா கிளைக் கழகத் தோழர்களும், செயலாளர்களும் இதனையே அழைப்பாகக் கொண்டு தங்கள் தங்கள் கிளைக் கழகக் கொடிகளுடன் 15-ம் நாள் பகல் 2 மணிக்கே, அறிவகத்தில் திரளுமாறு வேண்டிக் கொள்கிறேன் என மாவட்டச் செயலாளர் கே. எம் கண்ணபிரான் அறிவிக்கிறார்.

37-வது வட்ட தி. மு. கழக செ. கு. உறுப்பினர்கட்கு

15—7—54 மாலை 6 மணிக்கு சென்னை, இராயப்பேட்டை, தி. மு கழக 37-வது வட்ட மன்ற மனையில் செயலாளர் கோ. இளவரசு தலைமையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

சென்னை 5-வது வட்ட தி மு. கழகச் சார்பில் 14—7—54 மாலை 6 மணிக்கு கிளைக் கழக மாடியில் ஒரு சொற் பயிற்சிக் கூட்டம் தோழர் கி கலைச்செல்வி தலைமையில் நடைபெறும். 'போராட்டம்' எனும் தலைப்பில் தோழர்கள் கி. ஆர். பாலசுந்தரம், கி. இராசேந்திரன், என். ஆர். நாதன் மற்றும் பலர் பேசுவர்.

திருமணங்கள்

ஈரோடு நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் எம் சின்னப்பன்—தோழியர் கே தனம் அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ளும் வாழ்க்கை ஒப்பந்த விழா ஈரோடு, பெரியார் நகர் மன்றத்தில், 15—7—54 காலை 9 மணிக்கு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் முன்னிலையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், எஸ். ஆர். சந்தானம் வாழ்த்துரை வழங்குவர்.

• • •

15—7—54 காலை 7½ மணியளவில், தையாகுப்பம் மணமகன் இல்லத்தில் தோழர் கி. கலியபெருமாள்—தோழியர் ஈ ஈ அஞ்சலை வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் நடைபெறும். தோழர் [illegible] சம்பந்தம் பேசுவார். இத் திருமணத்தை யொட்டி 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது — வரப் பெற்றோம் — நன்றியுடையது— பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிய அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, [illegible] செட்டித் தெரு [illegible] இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.